கல்வி அமைச்சு

ஆங்கிலப் பாடத்துடன் பொது கலை திறன் (வெளிப்புற) பரீட்சை/ கலைமானி (வெளிப்புற) முதலாவது பரீட்சை மற்றும் விஞ்ஞானவியல் (வெளிப்புற) முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை அரச பல்கலைக்கழகங்களில் உள்வாங்குதல்
2022/2023ஆம் கல்வி ஆண்டு

2022/2023 கல்வியாண்டு முதல் ஆரம்பிக்கப்படும் பின்வரும் பாடத்திட்டங்களை கற்பதற்காக இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்வதற்காக ஆங்கிலப் பாடத்துடன் பொதுவான கலைத் திறன் (வெளிப்புற) பரீட்சை/ கலைமானி (வளைப்புற) பட்டத்தின் முதல் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி(வெளிப்புற) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்ற அரச அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. கலை பட்டத்திற்குரிய பாடத்திட்டம் (ஆங்கில் பாடத்துடன்))
II. விஞ்ஞானமானி பட்டத்திற்குரிய பாடத்திட்டம் (உயிரியல்/பௌதீகவியல்/ பயன்பாட்டுவியல்

02. விண்ணப்பதாரர்கள் இதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

I. (அ). குலை பாடத்திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்காக,
2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பிந்திய வருடங்களில் ஆங்கில பாடத்துடன் பொது கலைத் திறன் (வெளிப்புற) பரீட்சை/ கலைமானி (வெளிப்புற) முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல்
(ஆ). உயிரியல், பௌதீகவியல் அல்லது பயன்பாட்டுவியல் போன்ற பாடத்திட்டங்களுக்கு விண்ணப்பிப்பதற்காக,
2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பின்னர் நடாத்தப்பட்ட விஞ்ஞானமானி (வெளிப்புற) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல்

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று ஆசிரியராக 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், உரிய ஆசிரியர் நியமனம் நிரந்தரமானதாக இருத்தல் வேண்டும்.

III. தெரிவு செய்யப்படும் போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தேசிய கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றில் பட்டப் பாடத்திட்டத்தை கற்பதற்காக பதிவு செய்யப்படாமல் இருத்தல்.

IV. ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே உள்ள உயிரியல், பௌதிகவியல் அல்லது பயன்பாட்டுவியல் பாடத்திட்டம் தொடர்பாக க.பொ.த. (உயர தர) பரீட்சை அல்லது விஞ்ஞானமானி (வெளிப்புற) பட்டப்படிப்பு முதலாவது தேர்வில் அல்லது சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால் முன்தேவையாகக் குறிப்பிடப்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்

V. முழுநேர ஊதியத்துடன் கூடிய படிப்பு விடுப்புக்கு தகுதியுள்ள ஆசிரியராக இருப்பது.

03. அரச ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் சான்றளிக்கப்பட வேண்டியதுடன், அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட அதிபர்/ முகாமையாளரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

04. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில், சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு பாடசாலை அதிபர்/முகாமையாளரினால ஆசிரியர் தொடர்பாக கற்றல் விடுப்புக்கு ஒப்புதல் அளிக்கலாம்/முடியாது என்பதனை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

05. ஒவ்வொரு விண்ணப்பமும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்தின்படி தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், இரண்டு (02) பிரதிகளை **<u>08.12.2023 க்கு முன்னர் "கல்விப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல"</u>** என்ற முகவரிக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.. விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் "இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள் 2022/2023 (ஆசிரியர்களுக்கு)" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

06. இந்த அணுகளின் கீழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுத் கலைத் திறனாய்வுத் தேர்வு (வெளிப்புறம்) ஈரீட்சையில் / கலைமானி (வெளிப்புறம்) முதல் தேர்வு அல்லது விஞ்ஞானமானி (வெளிப்புறம்) பட்டப்படிப்பு முதல் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள், உரிய பாடத்திற்கு பெறப்பட்ட மதிப்பெண்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலமாக நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள் மூலமாகவே ஆகும்.

07. ஊதியத்துடன் கூடிய படிப்பிற்கான விடுப்பை பெறுவதற்குள்ள உரிமை தொடர்பாக நேர்முகத்தேரிவின் போது விசாரிக்கப்படும்.

08. பட்டங்களைப் பெற்றவுடன் பட்டதாரி ஆசரியர் நியமனங்கள் வழங்கும் பொறுப்பிற்கு இந்த அமைச்சு கட்டுப்படவில்லை

விண்ணப்பப் படிவம் மூன்று மொழிகளிலும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் ( www.moe.gov.lk ) விசேட அறிவிப்பு நிரலில் வெளியிடப்பட்டுள்ளது.

எம்.என்.ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு